**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**
**2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**இ.ம.எண்.1/2024 ன் அசல் வழக்கு எண்.43/2016**

திரு. G. உமாபதி

... மனுதாரர்/வாதி

..எதிர்..

1. திரு. G. குருசாமி (இறந்தவர்)
2. திரு. G. மகேஷ்குமார்
3. சார் பதிவாளர், ஆவடி
4. திருமதி. G. ஜானகி
5. திரு. G.மஹேந்திர பாபு
6. M. மகாலட்சுமி

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த மனுவானது 04.07.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. R. மாணிக்கவேல், A. ராமகிருஷ்ணன் மற்றும் S.பூவேந்தன் ஆகியோர் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI Date: 2025.08.07 18:25:47 +0530

தரப்பில் வழக்கறிஞர் திரு. S. பாலமுருகன், அவர்கள் ஆஜராகியும், 4ம், 5ம் மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள்/4ம், 5ம் மற்றும் 6ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. கருணாகரன் மற்றும் K. கோகுலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/ 3ம் பிரதிவாதி அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும் மற்றும் 1ம் எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவர். வழக்குச் சொத்து 'கிராம

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:26:56 +0530

நத்தம் திடல்' என வகைப்படுத்தப்பட்டு, நீண்டகால அனுபவத்தின் மூலம், உரிமையானது. வாதியின் தந்தை, மருமகனாக குடும்பத்தில் சேர்ந்தவர் என்பதால் தாயின் பிற சட்டபூர்வ வாரிசுகளுடன் சேர்ந்து தாய்வழி சொத்திலிருந்து 1/3 பங்கு மட்டுமே பெற்றார். முதல்பிரதிவாதி, வழக்கு அட்டவணை–அ சொத்தை இரண்டாம் பிரதிவாதிக்கு வழங்குவதற்கு அவருக்கு உரிமையில்லை ஏனெனில் அச்சொத்து அவருக்கு சொந்தமானதல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் (Settlement deed) வற்புறுத்தலின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. எனவே அது செல்லாது மேலும், ஒரு குடும்ப ஒப்பந்தத்தின் மூலம், மூத்த மகனான வாதிக்கு கீழ்தளம் ஒதுக்கப்பட்டது, அதேநேரத்தில் முதல் பிரதிவாதி (தந்தை) தனது இரண்டாம் மனைவி மற்றும் குழந்தைகளுடன் முதல் தளத்தில் வசித்து வந்ததார். முறையான பிரிவினை எதுவும் நடைபெறாததால், இந்து வாரிசுரிமைச் சட்டப்படி சொத்தைப் பிரிக்க வேண்டும். இரண்டாம் பிரதிவாதி, அவரது தாயாரான (நான்காம் பிரதிவாதி) மற்றும் 6 ம் பிரதிவாதி சகோதரி மகாலட்சுமி ஆகியோருக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை. வாதி, முதல் பிரதிவாதி (தந்தை) மற்றும் ஐந்தாம் பிரதிவாதி ஆகியோர் மட்டுமே தலா 1/3 பங்கு பெறுவதற்கு தகுதியுடையவர்கள். 17.08.2019 அன்று, ஆவடி காவல் துறையினர் மனுதாரரிடம் அவரது தந்தையின்

G
BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:27:04 +0530

மரணத்தை பற்றி விசாரித்த போது தான், இறந்த தந்தை முன்னதாக மகேந்திரபாபு மற்றும் மகேஷ்குமார் ஆகியோர் மீது தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகப் புகார் செய்திருப்பது தெரியவந்தது. வாதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அதைக் கோரினார். மாநிலத் தகவல் ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்த பிறகே அவரால் அந்த ஆவணத்தைப் பெற முடிந்தது. அந்தப் புகாரில், மனுதாரர்/வாதியின் தந்தை (1ம் பிரதிவாதி) தந்தை தனது இரு மகன்களும் தன்னை தொந்தரவு செய்ததாகவும், ரூ.4,00,000/–ஐ பலவந்தமாக எடுத்துக்கொண்டதாகவும், வற்புறுத்தலின் மூலம் சொத்தை வழங்குமாறு தனக்கு அழுத்தம் கொடுத்ததாகவும், சொத்தானது தனது முதல் மனைவிக்கு உரிமையானது என்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலன் சம்பந்தமான சட்டம், 2007 இன் கீழ் பணம் மற்றும் சொத்தை மீட்கவும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் கூறியுள்ளார். பின்னர் மனுதாரரின் தந்தை 1ம் பிரதிவாதி அவரது 2ம் மனைவியின் மகன் மகேஷ்குமாரின் வீட்டில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் இறந்தார். அதே நாளில் உடல் அவசரமாக அடக்கம் செய்யப்பட்டது. வழக்குச் சொத்து வாதியின் தாய்க்கு மட்டுமே சொந்தமானது 1ம் பிரதிவாதியான தந்தைக்கு 1/3 பங்கு மட்டுமே இருந்தது, அதனை முழுமையாக சட்டபூர்வமாக மாற்ற

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:27:14 +0530

முடியாது. எனவே, மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு அசல் வழக்குரையில் திருத்தங்களைச் செய்வதற்கு அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

**3. 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்து 4வது, 5வது மற்றும் 6வது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

2ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவர். முதல் பிரதிவாதியால் இரண்டாம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட 03.01.2011 (2011–ஆம் ஆண்டின் ஆவண எண்.1) தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி (Settlement Deed) மனுதாரர்/வாதிக்கு 09.12.2016 அன்றே தெரியும். பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில் இந்த ஆவணம் குறித்து தெரிவித்துள்ளனர். மனுதாரர் 08.02.2019 அன்று அவரது குறுக்கு விசாரணையின் போது 2016 தேதியிட்ட செட்டில்மெண்ட ஆவணம் அறிந்திருந்ததை வெளிப்படுத்தியுள்ளர். உடனடியாக வழக்குரையைத் திருத்த மனு தாக்கல் செய்யாமல் 15.04.2024 அன்று தான் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் குறிப்பாக முதல்பிரதிவாதி இறந்த பின்னர் இந்த திருத்தல் மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்தத் தாமதம் திருத்தத்தை சட்டரீதியாக நிலைநிறுத்த முடியாததாக்குகிறது. காலவரையறைச் சட்டத்தின் படி ஒரு

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:27:21 +0530

ஆவணத்தை செல்லாதது என்று விளம்புகை கோரலை ஆவணத்தைப் பற்றி அறிந்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். வாதி 2016-இல் அறிந்திருந்ததால், தற்போதைய மனு காலக்கெடுவை மீறியது ஆகும். கோரப்படும் திருத்தம் காலவரையறைச் சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:-

இம்மனுவில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனை:-</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்து வழக்கானது பி.சா.1 விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்/வாதி தரப்பில், வழக்குச் சொத்து 'கிராம நத்தம் திடல்' என

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:27:30 +0530

வகைப்படுத்தப்பட்டு, நீண்டகாலம் அனுபவித்து வருவதன் மூலம், தனது தாய்வழி குடும்பத்திற்கு உரிமையானது என்றும் வாதியின் தந்தையான 1ம் பிரதிவாதி மருமகனாகக் குடும்பத்தில் சேர்ந்து தாயின் பிற சட்டபூர்வ வாரிசுகளுடன் தாய்வழி சொத்திலிருந்து 1/3 பங்கு மட்டுமே பெற்றார் என்றும் முதல் பிரதிவாதி, அட்டவணை–அ சொத்தை முழுமையாக இரண்டாம் பிரதிவாதிக்கு வழங்குவதற்கு அதிகாரம் இல்லை என்றும் வாதி, முதல்பிரதிவாதியான, தந்தை மற்றும் ஐந்தாம் பிரதிவாதி ஆகியோர் மட்டுமே வழக்கு சொத்தில் தலா 1/3 பங்கு பெறுவதற்கு தகுதியுடையவர்கள் என்றும் 17.08.2019 அன்று, ஆவடி காவல் துறையினர் தனது தந்தையின் மரணத்தை பற்றி விசாரித்த போதுதான் அவர் முன்னதாக மகேந்திரபாபு மற்றும் மகேஷ்குமார் ஆகியோர் மீது தனது உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகப் புகார் செய்திருப்பது தெரியவந்ததாகவும் வாதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டில் தான் அதைக் கோரி பெற்றதாகவும் அந்தப் புகாரில், வாதியின் தந்தை தனது இரு மகன்களும் தன்னை தொந்தரவு செய்ததாகவும், ரூ.4,00,000/–ஐ பலவந்தமாக எடுத்துக்கொண்டதாகவும், வற்புறுத்தலின் மூலம் சொத்தை வழங்குமாறு தனக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:27:38 +0530

நலன் சம்பந்தமான சட்டம், 2007 இன் கீழ் பணம் மற்றும் சொத்தை மீட்கவும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் கூறியுள்ளார் என்றும் காவல்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், பின்னர் தனது சிற்றன்னை மகன் மகேஷ்குமாரின் வீட்டில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் அவரது தந்தை இறந்தார் என்றும், அதே நாளில் உடலை அவசரமாக அடக்கம் செய்துவிட்டனர் என்றும், வழக்குச் சொத்து வாதியின் தாய்க்கு மட்டுமே சொந்தமானது என்றும், அதில் தந்தைக்கு 1/3 பங்கு மட்டுமே இருந்தது என்பதால், அதனை முழுமையாக சட்டபூர்வமாக மாற்ற முடியாது என்றும் எனவே மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு அசல் வழக்குரையில் திருத்தங்களைச் செய்வதற்கு அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**7.** 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் 1ம் பிரதிவாதியால் இரண்டாம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட 03.01.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட ஆவணத்தை (Settlement Deed) மனுதாரர்/வாதி 09.12.2016 அன்றே அறிந்துகொண்டதாகவும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோதே இந்த ஆவணம் குறித்து தெரிவித்ததாகவும் வாதி 08.02.2019 அன்று அவரது குறுக்கு விசாரணையின் போதும் 2016 லேயே செட்டில்மெண்ட்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:27:47 +0530

ஆவணத்தைப் பற்றி அறிந்திருந்ததை வெளிப்படுத்தியுள்ளதாகவும், மனுதாரர் உரிய நேரத்தில் வழக்குரையைத் திருத்தல் மனுவை தாக்கல் செய்யாமல் 15.04.2024 அன்று கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் பிரதிவாதி இறந்த பின்னர் தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும் இந்தத் தாமதம் திருத்தத்தை சட்டரீதியாக நிலைநிறுத்த முடியாததாக்குகிறது என்றும், ஒரு ஆவணத்தை செல்லாதது என்று அறிவிக்கக் கோருவதற்கு ஆவணத்தைப்பற்றி அறிந்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் வாதி 2016–இல் அறிந்திருந்த நிலையில் தற்போதைய மனு காலக்கெடுவை மீறியது என்பதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

**8.** மேற்கண்டவாறு அமைந்த இருதரப்பு பொருண்மைகளைக் குறித்து பரிசீலிக்கும் போது மனுதாரரான வாதியால் 28.03.2016 அன்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டு பி.சா.1ன் விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. 03.01.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை (Settlement Deed) குறித்து மனுதாரர்/வாதிக்கு 09.12.2016 அன்றே தெரியும் என்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையிலும் முதல் பிரதிவாதியால் இரண்டாம்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:27:56 +0530

பிரதிவாதிக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட 03.01.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி (Settlement Deed) தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. குறிப்பாக மனுதாரர் அவரது தந்தையின் புகார் குறித்த விவரம் தனக்கு 2019 ம் ஆண்டில் தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் சுமார் 5 ஆண்டுகள் காலதாமதமாக எவ்விதமான வலுவான ஏற்கத்தக்க காரணங்கள் ஏதுமின்றி மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு ஏற்கத்தக்கதாக அமைய வில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுவை தள்ளுபடி செய்வதென முடிவு செய்கிறது.

முடிவில், இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:28:02 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G
BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.08.07 18:28:08 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>வரைவு/தெளிவு உத்தரவு</u>**
**இ.ம.எண்.1/2024 ன்**
**அசல் வழக்கு எண்.43/2016**
**நாள் 05.08.2025**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**